Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 4 ஆம் நாள் றம்ளான் 1 17-1-64 வெள்ளிக்கிழமை இதழ் 340

# இரு இயந்திரபடகுகள் கைப்பற்றப்பட்டன

## 10,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல்தரை இல்லை

### பத்தாயிரம் ஏக்கர் நிலம் பெற்றுத்தர எம். பி. வாக்குறுதி

அக்கரைப்பற்று, வெள்ளி

"அக்கரைப்பற்றுப் பகுதியிலுள்ள சுமார் பத்தாயிரம் கால்நடைகளுக்கு வசதியான மேய்ச்சல் தரையில்லாது பெரும் சங்கடப்படவேண்டியதாக இருந்துவருகிறது. இதற்குவேண்டிய வழிவகைகளை ஆராயும்பொருட்டு 'அக்கரைப்பற்று பண்ணை வளர்ப்புச் சங்கத்தினர்' அக்கரைபபற்று ஆலும் குறிச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமண்டபத்தில் நிந்தவூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜனப் எம். ஐ. எம். அப்துல் மஜீது தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர்கள. இக்கூட்டத்தில் மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தினல் கால்நடைகள் அருகிக்கொண்டுவருகிறதென்றும் இதனைக் காபபாற்றுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டுமென்றும் பலர் வற்புறுத்திப் பேசினர்கள்.

கல்லோயாப் பள்ளத்தாக்கின் வலதுபுறப் பிரதேசத்திலுள்ள பத்தாயிரம் ஏக்கர் பரப்பைக்கொண்ட (வடக்கு-அம்பலாம் ஓயா, தெற்கு-றூவல் குளம், கிழக்கு-சாமக்குளம், மேற்கு-வம்பி அடிக்குளம்) பகுதியைக்கொண்ட பகுதியை மேய்ச்சல் தரையாகப் பெற்றுத்தரவேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினரை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

குறிப்பிட்ட பத்தாயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலத்தை மேய்ச்சல் தரைக்கு ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளை காணி அபிவிருத்தி மந்திரியுடனும், கல்லோயா அபிவிருத்திச்சபை தலைவருடனும் தொடர்புகொண்டு ஆவன செய்வதாக எம். பி. உறுதியளித்தார். பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு. ஏ. எம். இபுறாகிம், செயலாளர் திரு. ரி. உருத்திரன். செயல்குழுவினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்: திருவாளர்கள் கே. வி. சோமசுந்தரம், ரி. உருத்திரன், மு. மீ. அப்துல்மஜீது, மு. மீ. முகையதீன்வாக, வை. சீனித்தம்பி.

## சிறுபான்மைத் தமிழருக்கு 20 ஏக்கர் காணி

### வலிகாமம் வடக்கில் 20 ஏக்கர் சுவீகரிப்பு

நல்லூர், வெள்ளி

வலிகாமம் வடக்கிலுள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களுக்காக ஒரு குடியேற்றத் திட்டம் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது இருபது ஏக்கர் காணியை அரசாங்கம் இதற்காக சுவீகரித்துள்ளது.

வீமன்காமம், மயிலிட்டி வடக்கு, கட்டுவன் ஆகிய பகுதிகளில் உள்ள பிரதேசங்களை அரசாங்கம் குடியேற்றத் திட்டத்திற்காகப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது. இருபது ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரித்ததனைத் தொடர்ந்து சுமார் 160 குடும்பங்கள் இக்குடியேற்றத்திட்டத்தில் அமர்த்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியேற்றத் திட்டத்தில் அமர்த்தப்படுபவர்களுக்கான காணிக்கச்சேரி சமீபத்தில் நடைபெற்றுள்ளதாகவும், இத்திட்டத்தில் அமர்த்தப்பட விருப்பவர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுவிட்டதாகவும் வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை அறிவித்தார்.

நேற்று வலிகாமம் வடக்கு காரியாதிகாரியும் கிராம சேவையாளர்களும் குடியேற்றத் திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணியைச் சென்று பார்வையிட்டனர். இருபது ஏக்கர் காணியையும் காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

சுவீகரிக்கப்பட்ட காணிக்காரர்களுக்கு அரசாங்கத்தின் நஷ்டஈடு கிடைக்குமென்று தெரிகிறது.

## இன்று

நீர்வேலிக் கந்தசாமி கோவில் கோபுர மண்டப அத்திவாரக் கல்நாட்டு வைபவம் இன்றிரவு 10-30க்கு திரு. சி. கனகரத்தினத்தால் நடத்தப்படும்.

## 163 பேர் மாண்டனர்

கல்கத்தா, ஜன. 16

கல்கத்தா கலகத்தில் இதுவரை மாண்டவர்கள் தொகை 163 என்றும், காயமடைந்தவர்கள் தொகை 363 என்றும் முதன் மந்திரி திரு. பி. ஸி. சென் அறிவித்தார்.

## கப்பல்களைக் கைப்பற்றினர்

ஜாகர்த்தா, ஜன. 16

ஹாங்காங் கடலில் நிறுத்தப்பட்டிருந்த இரு இந்தோனேஷியக் கப்பல்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் கைப்பற்றிக்கொண்டுவிட்டதாக இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி அறிவித்துள்ளார்.

## சிறுகளத்தூர் சாமா காலமானர்

சென்னை, ஜன. 16

பழம்பெரும் நடிகரான சிறுகளத்தூர் சாமா சென்றவாரம் காலமானர். கடைவீதிக்குச் சென்று சாமான்கள் வாங்கிக் கொண்டு வரும்பொழுது வீட்டுப்படிமீது கால்வைத்ததும் மயக்கமுற்ற இவர் உடனேயே மரணமடைந்துவிட்டார்.

58 வயதான சாமா பழம்பெரும் நடிகர் மட்டுமல்லாது படத்தயாரிப்பாளராகவும் இருந்தார். அநேகமாக தியாகராஜ பாகவதர் நடித்த படங்களில் எல்லாம் இவரும் நடித்திருக்கிறர்.

## இஸ்ரேல் சகியாது

டெல்அவிவ், ஜன. 16

ஜோர்டான் நதியை திருப்பிவிடும் விஷயத்தில் அரபுநாடுகள் குறுக்கிடுவதை இஸ்ரேல் அனுமதிக்காது என்றும், இதற்கான முயற்சி நசுக்கப்படுமென்றும் இஸ்ரேல் பிரதமர் கூறினர். இதற்கிடையில் கெய்ரோவில் கூடிய அரபு நாடுகளின் தலைவர்கள் இஸ்ரேலின் முயற்சிபற்றி ஆலோசித்தபின் அரபுநாடுகளின் கூட்டு ராணுவத் தலைமை ஏற்படுத்துவது பற்றி கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டனர்.

## கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட 6 பேர் கைதாயினர்

### வல்வெட்டித்துறை, காரைநகர் கடலில் சம்பவங்கள்

**மாவிட்டபுரம், வியாழன்**

**நேற்று வல்வெட்டித்துறை, காரைநகர் ஆகிய இரு இடங்களிலும் இரு கள்ளக்கடத்தல் முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக இரு யந்திரப் படகுகளும், அவற்றிலிருந்த பொருட்களும் கைப்பற்றப்பட்டன. 6 பேர் கைது செய்யப்பட்டனர்.**

வல்வெட்டித்துறை சங்கப் பகுதியைச் சேர்ந்த சப் கலக்டர் திரு. ஜோர்ஜ் வீரக்கூனும், உதவி பாதுகாப்பு உத்தியோகஸ்தர் திரு. சிறில் வீரசிங்காவும் நேற்றையதினம் ரோந்துசுற்றி வரும் சமயத்தில் கள்ளக்கடத்தலில் ஒரு யந்திரப் படகு ஈடுபட்டிருப்பதைக் கண்டு, அரைமைல் தூரத்திலிருந்து அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். வடபகுதியில் உள்ள சுங்க இலாகாவினரிடம் யந்திரப்படகு இல்லாமையாலே இவ்விதம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது. துப்பாக்கி பிரயோகம் செய்ததும் அதில் ஈடுபட்டவர்கள் ஓடிவிட்டார்கள். 44 மூடை புகையிலையும், யந்திரப் படகும் பறிமுதல் செய்யப்பட்டு வடபகுதி உப கலெக்டர் கே. திருநாவுக்கரசுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. கடத்திச செல்ல முயற்சிக்கப்பட்ட பாக்கின் பெறுமதி ரூ. 1100 என மதிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து நாகபட்டினத்துக்கு 350 ரூபா பெறுமதியான பாககுமூடைகளையும், ஒவல்டின் பெட்டிகளையும் கடத்திச் செல்ல எத்தனித்த யந்திரப்படகொன்றை காரைநகர் இராணுவத்தினர் தமது 'டியககாவ' என்ற யந்திரப்படகில் சென்று கண்டுபிடித்தனர். லெப்டினட் கேர்ணல் திரு. ஈ. ஸி. பெர்ணண்டோ தலைமையில் சென்ற இக்கோஷ்டி நடுக்கடலில் யந்திரப் படகைக் கைப்பற்றி ஆறுபேரைக் கைது செய்தது. சாமான்களும், யந்திரப் படகும் பறிமுதல் செய்யப்பட்டு வடபகுதி உப-கலெக்டர் திரு. கே. திருநாவுக்கரசுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சாமான்களைப் பறிமுதல் செய்யுமாறும் 16050 ரூபா அபராதம் செலுத்தும் படியும் அவர் உத்தரவிட்டார். கைதுசெய்யப்பட்ட 6 பேரும் அபராதம் செலுத்த மறுத்ததாகவும், இதுசம்பந்தமாகக் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்படுமெனவும் தெரியவருகிறது.

## மாறிச்செல்லும் தமிழாசிரியர்களுக்கு பழைய முஸ்லிம் மாணவர் பாராட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழாசிரியர்களின் சேவை, முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியை சாத்தியமாக்குகிறது" என யாழ்ப்பாணம் மனபட்டல் உலூரூம் முஸ்லிம் பாடசாலையில் பல வருடங்களாகச் சேவைபுரிந்து பதவி உயர்வு காரணமாக மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்கள் திரு. இ. செல்வராஜா, திரு. மு. சுப்பிரமணியம் ஆகியோருக்கு பள்ளிக்கூட பழைய மாணவர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார நிகழ்ச்சியில் ஜனப் எம். ஏ. எம். தாஹா தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

அரசாங்கத்தின் கல்விமுறைத் திட்டத்தின்படி தமிழாசிரியர்கள் எல்லோரும் முஸ்லிம் பாடசாலைகளை விட்டுப் பிரியும் இவ் வேளையில் அவர்களது சேவைககு முஸ்லிமகள் என்றும் கடமைப்பட்டவர்கள் எனக் கூற விரும்புகின்றேன். உயர்தரக் கல்விக்காக நாங்கள் தமிழ் மாணவர்கள் மத்தியில் உயர்தரக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஆரம்பிக்கும்பொழுது, முஸ்லிம் மாணவர்களாயிருந்த நாங்கள் தமிழ் இலக்கண, இலக்கிய பாடங்களில் ஏனைய மாணவர்களிலும் பார்க்க எவ்விதத்திலும் தரம் குன்ருதவர்களாக இருக்

(2-ம் பக்கம் பார்க்க)

### மணி வாக்கு

ஐக்கியம் தானாக திடீரென ஏற்படாது. அதற்காகப் பாடுபடவேண்டும்.
— கோல்ட்விங்கன்


ஈழநாடு
EELA NADU

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
தை மீ 4உ (17-1-64)


## உருப்படியான திட்டம் வேண்டும்

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து எல்லோருக்கும் வேலை கொடுக்கக்கூடிய ஒரு பெரும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு உணவு விவசாய அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா யோசனை தெரிவித்துள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம்பற்றிப் பரிசீலனை செய்யும் மந்திரிசபையின் உபகுழுவுக்குச் சமர்ப்பித்துள்ள இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு இருபது கோடி ரூபாய் தேவைப்படுமென்றும் இத்தொகை வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்காமல் மத்திய வங்கிமூலம் பெறலாமென்றும் தெரிவித்திருக்கிறார். இத்திட்டம் பெருமளவில் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

இத்திட்டத்தைப்பற்றி விரிவான விளக்கத்தை அவர் கொடுக்கவில்லையாயினும் அவரது யோசனை எந்த அளவில் பயன் கொடுக்குமென்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

வேலையில்லாதோருக்கு வேலை கொடுப்பதன்மூலம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக்கட்ட வேண்டியது அவசியம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் சமர்ப்பித்துள்ள திட்டத்தின்படி வீடமைப்பு, பாதைகள் செப்பனிடுதல், பழைய கட்டிடங்களை இடித்து புதிய பட்டினங்களை உருவாக்குதல் ஆகிய வேலைகளில் வேலையற்றோரை ஈடுபடுத்தலாம். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியலாம். வீதிகளைச் செப்பனிடுவதற்கும் புதிய கட்டிடங்களை அமைப்பதற்கும் ஈடுபடும் மக்கள் தங்கள் அன்றாட உணவுப் பொருள்களுக்கு இன்றுள்ள நிலையில் அந்நிய நாடுகளிடம்தான கையேந்திக் கொண்டு நிற்க வேண்டும். அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு; விலைவாசிகள் ஏற்றம். இந்த நிலையில் நகர நிர்மாணிப்பில் ஈடுபடும் மக்கள் மேலும் மேலும் வாழ்க்கைச் செலவுப் பளுவை எப்படித் தாங்க முடியும்? இதற்கு மாறாக உணவு உற்பத்தியைப் பெருக்கவும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கக்கூடிய வழிகளில் ஈடுபடவும் கூடிய திட்டங்களை அமைச்சர் கொண்டுவந்தால் வேலையற்றிருப்போருக்கு வேலை கிடைப்பதுடன் வாழ்க்கைச் செலவும் குறையும். அந்நிய நாடுகளிடம் உணவுக்காகக் கையேந்தும் நிலையும் நீங்கும்.

தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் இருபதுகோடி ரூபாயை மத்திய வங்கிமூலம் பெறலாமென்றும் அமைச்சர் யோசனை கூறியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வைப்பற்றி மத்தியவங்கி ஏற்கெனவே எச்சரித்துள்ளது. இந்நிலையில் உடனடியாக உற்பத்தி பயன்தராத திட்டத்தில் மேலும் 20 கோடி ரூபாயைச் செலவிடுவதனல் வாழ்க்கைச் செலவு மேலும் மேலும் அதிகரிக்கும்; பணவீக்கமும் ஏற்படும்!

பத்துவருடத் திட்டம், ஆறுவருடத்திட்டம், குறுகியகாலத் திட்டம் என்று நாடு சுதந்திரமடைந்த பதினைந்து ஆண்டு காலத்துக்குள் எத்தனையோ திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனல் எந்தத்திட்டம் சரிவர நிறைவேறவுமில்லை; உருப்படியான பலனைத் தரவுமில்லை. திட்டங்கள்பற்றி கேட்டுக் கேட்டு மக்கள் அலுத்துவிட்டார்கள். திட்டம் போடுவது மட்டும் போதாது. சரியான முறையில் திட்டத்தை வகுத்து அதை உரியமுறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். தமது இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மந்திரிசபையின் முழுஒத்துழைப்பும் கிடைக்க வேண்டுமென்றும் உணவு அமைச்சர் கூறுகிறார். நன்கு சிந்தித்து, நாட்டுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கக்கூடிய சிறந்த திட்டத்தைக் கொண்டுவராமல் வெறும் திட்டத்தை மட்டும் மந்திரிசபையின் ஒத்துழைப்புடன் கொண்டுவந்தாலும்கூட அதுவும் 'ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டின' கதையாகத்தான் முடியுமேதவிர உருப்படியான பயனைத் தராது.

எம்முடன் சேர்ந்து விடுதலையடைந்த அருகிலுள்ள ஜனநாயக நாடான இந்தியாவில் பெரும்பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் வெற்றிகரமாக நிறைவேறி வருகையில் நாம் மட்டும் வேறுதிசைகளில் கவனத்தைச் செலுத்தி காலத்தை வீணே கழிக்கிறோம்.

எந்தத் திட்டமும் நாட்டிலுள்ள மக்கள் அனைவரினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றால்தான் உருப்பட முடியுமென்பதையும் உணவு மந்திரி உணர்ந்து, மொழி, மத வேறுபாடுகளுக்கு இடம் கொடாமல் அதற்கேற்ற நல்ல திட்டத்தை, வாழ்க்கைச் செலவைக் குறைக்கக்கூடிய உற்பத்தியைப் பெருக்கக் கூடிய திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

முஸ்லிம்களின் புனித றம்ழான் மாதம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. இம்மாதத்தில் நோன்பு நோற்பது ஏன? நோன்பின் தாத்பரியம என்ன? என்பவற்றை இக்கட்டுரை சுருக்கமாகக் கூறுகிறது.

# புனித றமழான் நோன்புஇன்றுஆரம்பம்

— எம். கே. எச். முகம்மது —
(எருக்கலம்பிட்டி)

திருப்பிடித்த பொன் எவ்வாறு புடம் போடப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றதோ அதே போன்று மனிதனின் இருளடைந்த உள்ளங்களைப் பரிசுத்தமடையச் செய்து பக்குவப்படுத்தி, அவனை ஈடேற்றமடையச் செய்வதற்கெனத் தோன்றியவைகளே சமயங்கள். இச்சமயங்கள் பல பெயர்களால் அழைக்கப்பட்டுப் பல கொள்கைகளைப் போதித்து வரினும், ஆத்ம ஈடேற்றமே அவையாவற்றினதும் இறுதி இலக்காகும்.

ஆத்தும ஈடேற்றத்திற்கான கடமைகளை மட்டுமின்றி அன்றாடப் பிரச்னைகளிலும் கூட மனிதன் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளையும் இஸ்லாம் வரையறுத்துக் கூறுகின்றது. இவ்வாறு சகல துறைகளுக்கான சட்டதிட்டங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றமையாலேயே இம்மதம் "நேர்வழி காட்டும் மதம்" என்ற சிறப்புப் பெயரை பெற்றுள்ளது. பின்வரும் ஐம்பெரும் கொள்கைகளையுடைய இம்மதம் உலகுக்கு ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது.

1. அனாதையாகி, அரூபியாகி, எங்கும் நிறைந்த ஏகனாகி விளங்கும் இறைவன் (அல்லாஹ்), உலகைப் படைத்து அதன் கண் பல கோடிக்கணக்கில் உயிரற்ற, உயிருள்ளவற்றைச் சிருஷ்டித்து அவற்றைப் போஷித்தும் வருகிறான். முகம்மது நபி (ஸல்) அவர்களை இறுதி இறைத்தூதராக உலகுக்கு அனுப்பினான் (கலிமா); 2. இறைவன் மனிதனுக்காக உலகத்தில் செய்து வரும் உதவிகளுக்குக் கைமாறு செய்யுமுகமாக நன்றியறிதலோடு தினமும் ஐவேளை அவனைத் தியானித்து வருதல் வேண்டும் (தொழுகை); 3. மனிதன் தேடிச் சேமித்து வைத்திருக்கும் பணம், பொன், வெள்ளி ஆகியவற்றிற்கு 2 1/2 வீதமும், சேமித்திருக்கும் தானியங்களுள் ஒரு பகுதியையும், தான் வளர்க்கும் ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களுள் சிலவற்றையும் ஏழைவரியாகச் (சகாத்து) கொடுத்துவரல் வேண்டும்; 4. வருடாவருடம் வரும் றமழான் மாதத்தின் முப்பது நோன்புகளையும் நோற்க வேண்டும்; (5) உடல் வலிமையும், மனவலிமையும், பணவலிமையும் உடைய ஆண், பெண் அனைவரும் தனது ஆயுளில் ஒரு முறையாவது புனித மக்கா நகருக்குச் சென்று ஹஜ்ஜு" செய்ய வேண்டும் என்பவைகளே இவ்வைந்து கடமைகளாகும். இக்கடமைகளுள் நான்காவதாகத்திகழும் "நோன்பு நோற்றல்" என்பதை முஸ்லிம்கள் எதிர்நோக்கியிருக்கும் இந்நேரத்தில் அந்நோன்பின் மகத்துவத்தையும், அதன் தாத்பரியத்தையும், அது எவ்வாறு நோற்கப்படவேண்டும் என்பதைப் பற்றியும் விளக்குவது மிகவும் பொருத்தமாகும்.

### நோன்பு நோற்பது எவ்வாறு?

நான்காவது சாமத்தில் (சகர்வேளையில் — காலை 3 மணிக்கு) எழுந்து உணவருந்தி நோன்பு நோற்பதற்கான உறுதியுரையைச் செய்து (நிய்யத்துச் செய்தல்) அடுத்த நாள் சூரியன் அஸ்தமிக்கும் வரை உணவருந்தாமலும், நீர் பருகாமலும், புகைபிடிக்காமலும் இருந்தால் மாத்திரம் போதாது. பொய் சொல்லுதல், புறம் பேசுதல், தாயம் உருட்டுதல் போன்ற தீயசெயல்களில் ஈடுபட்டுப் பகற் பொழுதை அவமே கழிக்காது இறையை வணங்குவதிலும் திருக்குர்ஆனை ஓதுவதிலும், சமயகிரந்தங்களைப் படிப்பதிலும், மார்க்க பிரசங்ககள் (ஹதீதுகள்) கேட்பதிலும் நேரத்தைச் செலவழிக்க வேண்டும். இராவேளைகளில் நடாத்தப்படும் விசேட பிரார்த்தனைளில் பங்கு கொண்டு சகர்வேளை வரை திருக்குர்ஆனை அழகுற ஓதியும் வருதல் வேண்டும். அயலவரிடமும், சுற்றத்தாரிடமும் சென்று அவர் தம் பசியைப் போக்க அன்னதானம் வழங்கியும் வருதல் வேண்டும். இவைகளே நோன்பு நோற்பவன் தடைப்பிடிக்கவேண்டிய உண்மை நெறிகளாகும். நோயாளர்கள், உடல் வலி குன்றியவர்கள், வயோதிபர்கள், சிறுவர்கள், பிரயாணிகள் ஆகியோர்கள் நோன்பு நோற்பதினின்றும் தவிர்க்கப்பட்டுள்ளனர். எனினும் தருமம் செய்வதன் மூலமும், பிறிதோர் மதத்தில் நோன்பு நோற்பதன் மூலமும் தம்மீது சுமத்தப்பட்ட கடமைகளினின்றும் இவர்கள் விடுதலை பெறலாம்.

### நோன்பின் தாத்பரியம்

நோன்பு நோற்பதன் மூலம் நற்கருமங்களில் தன்னை ஈடுபடுத்தி, மனதைத் தீய கர்மங்களிலிருந்து விடுதலை பெறச் செய்வது மாத்திரம் இதன் நோக்கம் அன்று. நிரந்தரம் வேலை செய்து களைப்புற்றிருக்கும் சீரண உறுப்புகள் ஓய்வு பெற்று அதனல், உரம் பெறவும் இவ்வுபவாசம் மறைமுகமாக உதவுவதனல் உடல் சுத்திகரிக்கப்படுகின்றது. அன்றியும் பகலென்றும் இரவென்றும் பாராது வெயில் என்றும் வேனல் என்றும் நோக்காது நெற்றி வெயர்வை நிலத்தில் சிந்த மாடாக உழைக்கும் பாட்டாளி பட்டினி கிடக்க, சுற்றும் விசிறியின் கீழ் நாற்காலியில் அமர்ந்திருந்து தொந்தி புடைக்க உண்ணும் முதலாளிக்கு இந்நோன்பு நல்லதொரு பாடத்தைக் கற்பிக்கிறது. பட்டினியால் வாடும் பாட்டாளியின் நிலையை இந்நோன்பு உணர்த்துவதால், அவனின் துன்பங்களைக் களைந்தெறிய முனைகின்றான் முதலாளி. ஏழைகளின் துயரைப் போக்க உண்டாக்கப்பட்டதே இந்நோன்பு என்று கூறின் மிகப் பொருந்தும்.

## பட்டினசபைக்கு யு. என். பி. தலைவர்

கொச்சிக்கடை, வியாழன்

புதிதாக உருவாக்கப்பட்ட தனகொடுவ பட்டினசபைக்கு யு. என். பி. கட்சியைச் சேர்ந்த திரு. மார்தியஸ் பெரேரா திஸநாயக்கா தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் 5-ம் வட்டாரத்தில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

யு. என். பி. கட்சியைச் சேர்ந்த திரு வின்சன்ட் போல் பெர்ணைடோ உப-தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

—

## மூவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது

கொழும்பு, வியாழன்

களனி ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்துகொண்ட இரு இளம் பெண்களின் சடலங்களில் ஒன்றும் மற்றும் இருவரின் சடலங்களும் நேற்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

16 வயதுடைய ஐ. பி. பிரேமாவதி என்பவரின சடலத்தைப் பொலிஸார் பல மணி நேரம் தொடர்ச்சியாகத் தேடியபின் கண்டுபிடித்தனர். 18 வயதுடைய ஐ. பி. சிரியாவதியே மற்றப் பெண் என்றும் இருவரும் சொந்தக்காரர்களென்றும் அறியப்படுகிறது.

## 'அதிபரை இடமாற்றம் செய்யாதீர்'
### கிராமசபை தீர்மானம்

நல்லூர், வியாழன்

தெல்லிப்பழை கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் திரு. த. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது யூனியன் கல்லூரி அதிபரை இடமாற்றம் செய்யவேண்டாம் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நடேஸ்வராகல்லூரி அதிபராகவிருந்த திரு. கே. கிருஷ்ணபிள்ளையை ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தெல்லிப்பழை யூனியன்கல்லூரிக்கு அதிபராக வித்தியாபகுதி மாற்றியுள்ளது. தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் 15 வருடங்களுக்கு மேலாக உபஅதிபராக இருந்து தெல்லிப்பழை மக்களை நன்கு அறிந்து சிறந்த தொண்டாற்றினமையாலும் யூனியன்கல்லூரி மாணவர்களில் பெரும்பான்மையினர் சைவசமயத்தவர்களாக இருப்பதனலும் தற்போது மாற்றப்பட்டுள்ள அதிபரை வேறிடத்துக்கு மாற்ருமல் யூனியன் கல்லூரி அதிபராகவே கடமையாற்ற அனுமதிக்கும்படி இச்சபை கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க கிராமசபைத் தலைவர் திரு. த. செல்வரத்தினம், திருவாளர்கள் வி. வன்னியசிங்கம், ந. சுப்பிரமணியம், சி. குணரத்தினம ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

—

## மாறிச் செல்லும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கக்கண்டோம். அப்பொழுதிலிருந்தே நாம் நாம் பிரிந்து செல்லும் இவ்வாசிரியர்களின் சேவையை நன்குணரத் தொடங்கினேம். தற்பொழுது கடமைபுரியும் முஸ்லிம் ஆசிரியர்களும், அவர்கள் விட்டுச் செல்லும் இப் புனித பணியை நன்குணர்ந்து சேவைசெய்ய முயல்வார்கள் என எதிர்பார்க்கிறோம்"

பாடசாலைத் தலைமையாசிரியர் ஜனப் எம். எச். எம். அப்துல் றஸாக் பேசுகையில் "முஸ்லிம் பிள்ளைகள் கல்வி பயிலும் இப் பள்ளிக்கூடத்தில் அவர்களது கலாச்சாரத்துக்கு ''கற்ப இவ்விரு ஆசிரியர்களும் கல்வி பயிற்றுவித்ததைக் கண்டு வியப்புக்கொண்டதாகக் கூறினர்.

இவ்விரு ஆசிரியர்களின் பழைய மாணவரும் தற்போது பாவற்குளம் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமைபுரிபவருமான ஜனப் கே. எம். சகுல்ஹமீது இரு ஆசிரியர்களையும் பாராட்டிப் பேசினர்.

ஆசிரியர் திரு. இ. செல்வராஜா தனக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தான் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக முஸ்லிம்கள் மத்தியில் கடமைபுரிந்துவருவதால், தனக்கும் முஸ்லிம்களில் ஒருவன் என்ற எண்ணமே உதிக்கிறதெனச் சொன்னர். அவர் தொடர்ந்து பேசுகையில் பாலர்வகுப்புகளில் கல்வி கற்பிப்போர் சிறந்த பயிற்சி உடையவர்களாக இருக்கவேண்டியது அவசியம் என்ருர்.

ஆசிரியர் திரு. மு. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தன்னிடம் கல்வி பயின்ற பல மாணவர்கள் பல்வேறு முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டுள்ளதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்.

தேனீர் விருந்துடன் நடைபெற்ற இவ் வைபவத்தில் பழைய மாணவர்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார்கள். ஜனப்கள் எம். ஏ. வி. என். தெக்பீக், எம். அஹ்மது. எம். ஏ. வி. தையூப் ஆகியோரும் சபையினர்கள். வாழ்த்திதழ் அன்பளிப்புகள் ஆகியன வழங்கப்பட்டன.

# 5500 சிறுபான்மையினர் வீடு திரும்பினர்

## மேற்குவங்க கலவர நிலைமைபற்றி முதன் மந்திரி சென்

### கிழக்கு பாகிஸ்தானிலும் அமைதி நிலவுவதாக அறிவிப்பு

கல்கத்தா, ஜன. 16

**கல்கத்தாவில் நிலைமை சகஜமடைந்ததைத் தொடர்ந்து 5500 முஸ்லிம்கள் மீண்டும் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிவிட்டதாக முதன்மந்திரி திரு. பி. ஸி. ஸென் அறிவித்தார்.**

அகதிகளுக்கான புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாயும், 87000க்கு மேற்பட்ட அகதிகளுக்கு ஒருவார ரேஷன் வழங்கப்பட்டிருப்பதாயும் மேலும் அவர் கூறினர். நேற்று முதல் நிலைமையில் அமைதி ஏற்பட்ட போதிலும் ராணுவமும் பொலிசும் இப்பகுதிகளில் ரோந்து சுற்றி வருவதாக அவர் தெரிவித்தார். கல்கத்தாவில போக்குவரத்துக்கள் மாமூலாக நடைபெற்றன. கடைகள் திறக்கப்பட்டன.

ராணுவத் தளபதி ஜெனரல் சௌத்திரி நேற்று ராணுவ தளத்தை முன்னிட்டுப் பேசுகையில் 48 மணிநேரத்திற்குள் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த ராணுவத்தின் திறமையைப் பாராட்டினர்.

கலகப்பகுதிகளுக்கு மேற்கு வங்ககவர்னர் ஸ்ரீமதி பத்மஜா நாயுடு சென்று பார்வையிட்டார். அகதிகள் முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்தார். அகதிகளுக்கு தங்குமிடம், உணவு, உடை, மருந்துப் பொருட்கள் ஆகியன வழங்கப்பட்டிருக்கின்றன. அகதிகள் நிவாரணநிதி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. முதன்மந்திரி தலைமையில் சமாதானக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானில் டாக்காவின் சிலபகுதிகளிலும், நாராயண்கஞ்சிலும் 24 மணிநேர ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஏராளமானோர் இங்கு கைதுசெய்யப்பட்டதாயும் நிலைமை இப்போது கட்டுக்கடங்கியிருப்பதாயும் பாகிஸ்தான் அறிக்கை ஒன்று கூறுகிறது.

டில்லியில் நேற்றுக் கூடிய தேசிய பாதுகாப்புசபையில் உள்நாட்டுமந்திரி திரு. நந்தா பேசுகையில், கல்கத்தாவில் ராணுவம் நல்லவேலை செய்திருப்பதாய்க் குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமைவரை அஸ்ஸாம், திரிபுரா ஆகிய எல்லைகளிலிருந்து 1000 இந்திய முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு வந்திருப்பதாயும் இதுவரை இவ்வாறுவந்த முஸ்லிம்களின் மொத்தஎண்ணிக்கை 1,12,253 என்றும் பாகிஸ்தான்ரேடியோ அறிவித்தது.

### ஆற்றில் மூழ்கி 30 பேர் பலி!

ரங்கூன், ஜன. 16

பொங்கலைக் களிக்கச் சென்ற 30 இந்தியர்கள் ஆற்றில் மூழ்கி மாண்டனர். 90 பேர் சென்றபடகொன்று ரங்கூன் ஐராவதி ஆற்றில் கவிழ்ந்ததால் அவர்கள் மாண்டனர். இவர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளுமவர். மிகுதி 60 பேர் மீட்கப்பட்டனர்.

### 2-வது டெஸ்ட்

பம்பாய், ஜன. 16

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே 2-வது கிரிக்கெட் டெஸ்ட்போட்டி, வருகிற செவ்வாய்கிழமை பம்பாயில் ஆரம்பமாகும்.

### இன்று சந்திப்பர்

டோக்கியோ, ஜன. 16

அமெரிக்க அட்டோர்ணி ஜெனரல் திரு. ராபர்ட் கென்னடி, நாளை இந்தோனேஷிய ஜனதிபதி சுகார்னேவை இங்கு சந்தித்துப் பேசுவார்.

### கென்னடிக்கு 8,00,000 செய்திகள்

வாஷிங்டன், ஜன. 16

ஜனதிபதி கென்னடியின் கொலைபற்றி தமக்குக் கிடைத்த 8,00,000 அனுதாபச் செய்திகளை தமது கவலை மறைந்தவுடன் வாசிப்பதாக ஸ்ரீமதி ஜேக்வலின் கென்னடி அறிவித்திருக்கிறர். தேசம் முழுவதுக்கும் அவர் விடுத்த ஒலிபரப்புச் செய்தியில், "எனது கணவர்மீது உலகெங்கும் காட்டப்பட்ட அன்பு என்னல் மறக்கமுடியாத ஒன்று" எனக் கூறினர். ஒவ்வொரு அனுதாபச் செய்தியும் எனது குழந்தைகளுக்கு மட்டுமின்றி, எனது கணவரைப்பற்றி இதர நாடுகளில் எவ்வித மனப்பான்மை இருந்தது என்பதை வருங்கால சந்ததியினர் அறியும் பொருட்டும் பாதுகாக்கப்படும் என அவர் கூறினர்.

### ஜெனரல் சௌத்ரி

புதுடில்லி, ஜன. 16

சென்ற ஆண்டு இந்திய ராணுவம் குறிப்பிடத்தக்க அளவு விஸ்தரிக்கப்பட்டதாய் ராணுவதினம் சம்பந்தமான கூட்டத்தில் இந்திய பிரதம தளபதி ஜெனரல் சௌத்ரி கூறினர். 42 ராணுவ அதிகாரிகளுக்கு அவர் வீரப்பதக்கங்களை அப்போது அளித்தார்.

### பாதுகாப்பு முயற்சி தளராது

புதுடில்லி, ஜன. 16

எல்லையில் மந்த நிலைமை காணப்படுகிறது என்பதற்காக, இந்தியா தன் பாதுகாப்பு முயற்சிகளைத் தளர்த்தப்போவதில்லை என பாதுகாப்பு மந்திரி சாவன் அறிவித்தார்.

### மாணவர் வேலைநிறுத்தம் முடிவு

சண்டிகர், ஜன. 16

பஞ்சாபில் கடந்த 33 தினங்களாக நடைபெற்றுவந்தமாணவர் வேலைநிறுத்தம் நேற்று முடிவடைந்தது.

## "பாகிஸ்தானை பாதுகாக்கும் நேசநாடு சீனு ஹிந்து இந்தியா முஸ்லிம்களை படுகொலை செய்கிறது"

### —டாண் தலையங்கம்

கராச்சி, ஜன. 16

"பாகிஸ்தான் மக்கள் சீனுவை ஒரு நண்பனுகவும், அண்டை நாடாகவும் மட்டுமின்றி, ஹிந்து இந்தியாவுக்கெதிரான பாதுகாவலராகவும், நேச நாடாகவும் நினைக்க ஆரம்பித்திருக்கிறர்கள்" என பாகிஸ்தான் பத்திரிகை "டாண்" எழுதியிருக்கிறது.

அது எழுதியுள்ள மூன்று பத்தி ஆசிரியர் தலையங்கத்தில் பாகிஸ்தானுக்குப் பதிலாக இந்தியாவுக்கு உதவியளிக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டு வருகிறதென்றும், இந்திய-பாகிஸ்தான் பிளவு ஏற்படும் வகையில் இந்த உதவி இருக்கிறதென்றும் அது கூறியிருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானில் குல்னவில் ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தை சிறிய சம்பவம் என வருணித்துவிட்டு, இந்தியாவில் முஸ்லீம் மைனரிட்டிகள் படுகொலை செய்யப்படுகிறர்கள் எனவும் கூறுகிறது.

"முஸ்லிம்களாய் இருக்கிறர்கள் என்ற காரணத்திற்காக ஹிந்துக்கள் முஸ்லிம்களை கொல்கிறர்கள். முஸ்லிம்கள் மீது இந்தியா கொண்டுள்ள வெறுப்பினல், அது ராணுவ பலம் அடைவது பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு ஆபத்தானது" என்றும் "டாண்" கூறிகிறது.

ராணுவ கொலைகார இந்தியாவுக்கும், கடவுள் விரோத-ஆனல் நட்பு நிறைந்த சீனக் கம்யூனிஸத்துக்கும் இடையே பாகிஸ்தான் முஸ்லிம்கள் சீனவைத் தான் தற்போதைய சூழ்நிலையில் தெரிவு செய்ய முடியும். அமெரிக்காவின் சுயநலமும், ஏகாதிபத்திய நோக்கமும் மறையாவிடின் மேற்கு நாடுகளுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே பிளவு அகலப்படுவதைத் தவிர்க்க முடியாது" என்றும் "டாண்" பத்திரிகை கூறியிருக்கிறது.

கல்கத்தா கலவரம் பற்றி எழுதிய "டானிங் நியூஸ்" பத்திரிகை, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்காளத்துக்கு அனுப்பும் சகல உணவுப் பொருட்களும் தடை செய்யப்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறது.

"இந்திய முஸ்லிம்களுக்குச் சாதாரண மனித உரிமை அளிக்கும்படி ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்கும், பாதுகாப்புச் சபைக்கும் புகார் செய்வதே அடுத்த நடவடிக்கையாக இருக்கவேண்டும்" என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

## மந்திரிகள் மீதான லஞ்சக் குற்றச் சாட்டுக்கள்

### நேருவின் தீர்ப்புக்கு விட நந்தாவின் புதிய திட்டம்

புதுடில்லி, ஜன. 16

**கண்காணிப்புக் கமிஷனின் கட்டுப்பாட்டிற்குள் வராத மத்திய மந்திரிகள், ராஜ்ய முதன் மந்திரிகள், இதர மந்திரிகள், உயர்தர அதிகாரிகள் ஆகியோர் மீதான லஞ்சக் குற்றங்களைக் கையாள்வது பற்றிய திட்டம் ஒன்றுக்கு உள்நாட்டு மந்திரி திரு. நந்தா இறுதி வடிவம் கொடுத்திருக்கிறர்.**

புவனேஸ்வரத்தில் இதுசம்பந்தமாக அவர் ராஜ்ய முதன் மந்திரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர். இத்திட்டம் எல்லா ராஜ்ய அரசாங்கங்களுக்கும் அனுப்பப்படும்.

இத்திட்டத்தின்படி மத்திய மந்திரிகள், ராஜ்ய முதன் மந்திரிகளுக்கெதிரான குற்றச்சாட்டுகள் பிரதம மந்திரி நேருவிடம் சமர்ப்பிக்கப்படும். இதுபற்றி விசாரணை நடத்தவேண்டுமா இல்லையா என்பதை அவர் மட்டுமே முடிவசெய்வார்.

குற்றச்சாட்டுக்களில் ஆதாரம் இல்லை என பிரதம மந்திரி முடிவு செய்தால் விஷயம் அத்துடன் கைவிடப்படும். குற்றச்சாட்டுகள் பற்றி பிரதமர் ஆதாரமிருப்பதாகக் கண்டால், மேல்நடவடிக்கை எடுக்கப்படுமுன் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ராஜினமாச் செய்ய வேண்டும். விசாரணை கமிஷன் சட்டத்தின் கீழ் அல்லது மத்திய உளவறியும் இலாகாவின் கீழ் இக் குற்றங்கள் பரிசீலிக்கப்படும்.

எல்லா விசாரணைகளும் முடிவுற்றபின் பிரதமந்திரியின் இறுதி முடிவுக்கு அது விடப்படும்.

### மலையாளப்புலவருக்கு ஞாபகச்சின்னம்

திருவானந்தபுரம், ஜன. 16

மாபெரும் மலையாளப் புலவர் எழுத்தச்சனுக்கு ரூ 2 லட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் ஞாபகார்த்தச் சின்னத்துக்கு ராஜ்ய கவர்னர் பட்டம் தாணுபிள்ளை அடிக்கல் நாட்டினர்.

### நேருவுக்கு பியர்ஸன் செய்தி

புதுடில்லி, ஜன. 16

பிரதமர் நேரு விரைவில் குணமடைய வேண்டும் என கானடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறர். திரு நேரு நேற்றைய தினத்தை அமைதியாகக் கழித்தார்.

### கோவா

பஞ்சிம், ஜன. 16

கோவாவை மகாராஷ்டிரத்துடன் இணைப்பது பற்றிய விஷயம் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் என கோவா முதன் மந்திரி கூறினர்.

### சுபாஷ் போஸ் சொற்பொழிவுகள்

புதுடில்லி, ஜன. 16

அடுத்த வியாழக்கிழமை நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்ததினத்தன்று, தென் கிழக்காசியாவில் அவர் நிகழ்த்திய ஆங்கில, வங்காள சொற்பொழிவுகளைக் கொண்ட இசைத்தட்டுக்கள் ஒலிபரப்பு செய்யப்படும். இந்த இசைத்தட்டுக்கள் நேற்று ஜனதிபதி ராதா கிருஷ்ணனிடம் ஒப்படைக்கப்பட்டன.

**மலேஷியா**

## மகபகால் — துங்குரஹ்மான் சந்தித்துப் பேசுவர்

மணிலா, ஜன. 16

மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானைச் சந்திக்க விரும்புவதாக பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகால் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறர்.

கோலாலம்பூரில் துங்கு ரஹ்மான் இதுபற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில்பிலிப்பைன்ஸ் அதிபரைத் தாம் சந்தித்து மலேஷியாபற்றிப் பேச தயாராய் இருப்பதாகக் கூறியிருக்கிறர்.

மந்திரிசபைக் கூட்டம் ஒன்றுக்குப்பின் துங்கு ரஹ்மான் இவ்வாறு தெரிவித்தார். "இப்போதைய அபிப்பிராய பேதங்களைத் தீர்த்துக் கொள்ள எதுவும் செய்யப்படுமானல் அது நல்லதே" என்றும் அவர் கூறினர்.

### அமெரிக்கா-பனமா மீண்டு உறவு?

வாஷிங்டன், ஜன. 16

அமெரிக்காவுக்கும் பனமாவுக்குமிடையே மீண்டும் ராஜீய உறவுகள் கூடிய விரைவில் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சி வெற்றி பெருவிட்டால் ஐ. நா. பாதுகாப்புசபைக் கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என ஐ. நா. விலுள்ள பனமா பிரதிநிதி முன்னர் கேட்டிருந்தார்.

### தெ. ஆபிரிக்கா நிராகரித்தது

கேப்டவுன், ஜன 15

ஒலிம்பிக் விளையாட்டில் இனத் துவேஷத்தைப் புகுத்த வேண்டாமென்ற சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் கோரிக்கையை தென்னுபிரிக்கா நிராகரித்துவிட்டது.

### சாம்ராஜ்ய பிரதமர் மகாநாடு

லண்டன், ஜன. 16

இவ்வருடம் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டை நடத்துவதா இல்லையா என்பதுபற்றித் தாம் ஆலோசனை செய்து வருவதாக பிரிட்டிஷ் பிரதமர் சேர் அலெக்ஸ்டக்ளஸ் ஹியூம் தெரிவித்துள்ளார்,

இதுகுறித்து தாம் மற்ற சாம்ராஜ்ய நாட்டுப் பிரதமர்களுடன் கலந்து ஆலோசிக்கப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

### கைதியை விடுவிக்க ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜன. 16

புதுடில்லி பொலிஸ் நிலையமொன்றில் வைக்கப்பட்டிருந்த ஒரு கைதியை விடுவிக்குமாறு கோரி, பெரும் ஜனக் கூட்டம் ஒன்று ஆர்ப்பாட்டம் செய்தது. பொலிஸ் ஸ்டேஷனை அவர்கள் கற்களாலும், தடிகளாலும், இதர பொருட்களாலும் தாக்கினர். பொலிசார் தடிகளையும், கண்ணீர்ப் புகையையும் கொண்டு இக் கூட்டத்தைக் கலைத்தனர்.

### லண்டன் மகாநாடு

லண்டன், ஜன. 16

சைபிரஸ்பற்றிய மகாநாடு நேற்று இங்கு ஆரம்பமானது.

# தமிழ்ப்பெரியார்களின் நினைவு விழா

நல்லூர், வியாழன்

"புலவர்களுக்கு விழா எடுத்தால்மட்டும் போதாது. அவர்கள் விட்டுச்சென்ற நூல்களைப் பயின்று, அவற்றின் கருத்துகளை நன்குணர்ந்து உலகுக்கு உணர்த்தவேண்டும். அவைகளே அவர்களுடைய புகழை நிலைநிற்கச் செய்யும்" என்று பண்டிதர் க. சச்சிதானந்தன் விமன்காமம் ஆங்கில பாடசாலையில் நடைபெற்ற பெரியார்கள் நினைவுவிழாவில் பேசுகையில் கூறினர்.

பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ணபாரதியார், வித்துவசிரோன்மணி கணேசையர், குருகவி மகாலிங்கசிவம் ஆகிய மூன்று தமிழ்ப் பேரறிஞர்களைக் கௌரவிக்குமுகமாக கம்பன் கலைக்கழகம் நடாத்திய தமிழ்ப் பெரியார்கள் நினைவு விழாவிற்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தலைமைவகித்தார்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் வாழ்த்துரை வழங்கி மேலும் பேசுகையில் "மூன்று பெரியார்களையும் நினைவுகூர முன்வந்த கம்பன் கலைக்கழகத்தினரை வாழ்த்துவதுடன், மேலும் நற்பணிகளை ஆற்ற ஊக்குவிக்கவேண்டியது நமது கடனுதுமென்றும் வள்ளுவர், கம்பர், வியாசர், புகழேந்தி போன்றவர்களுடன் சேர்த்துக் கௌரவிக்கவேண்டிய தகுதி இம்மூவருக்கும் உண்டென்றும்" கூறினர்.

கழகத் தலைவர் திரு. ஆ. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை அவைவரையும் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:

"சில மாதங்களுக்கு முன் சிலப்பதிகார விழா மூலம் எமது கழகம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டது. வெகு விரைவில் நாம் நடாத்தவிருக்கும் 'கம்பன் விழா'விற்கு முன்னோடியாகவே இன்று இவ்விழாவினை நடாத்துகின்றோம். நாம் ஆற்றவிருக்கும் நற்பணிகளுக்கு உங்கள் நல்லாதரவை தவறாது நல்குவீர்களென எதிர்பார்க்கிறோம்"

திரு. ச. அம்பிகைபாகன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"தமிழ்ப்பெரியார்களின் திருவுருவப்படங்களைப் பாடசாலைகளில் வைப்பதன் மூலம் பிள்ளைகளிடம் அவர்களைப் பற்றிய அறிவைப் பெருக்கமுடியும். பாடசாலைகளில் இத்தகைய உருவப்படங்களை வைக்க அரசாங்கம் தடைசொல்லமாட்டாது.

பழைய நூல்கள் இப்போது கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. பழைய நூல்களைப் புதுப்பித்து அச்சிடாவிட்டால் உள்ள நூல்களே பிற்காலத்தில் கிடைக்காமற்போய்விடும். பழைய நூல்களைப் புதுப்பிக்கும் தொண்டில் கழகங்களும், சங்கங்களும் ஈடுபடவேண்டும்."

காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் பெரியார்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்துப் பேசுகையில் திருமூலரின தமிழ்ப் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

பட்டினசபை இரண்டாம் வட்டார உறுப்பினர் திரு. க. வைத்திலிங்கம் மங்கள தீபம் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், தமிழ்ப் பெரியார்களுக்கு எடுக்கும் விழாக்கள் தமிழைப் பாதுகாக்க உதவுவனவாக இருக்கவேண்டுமென்று கூறினர்.

பண்டிதர் க. நாகலிங்கம் 'பாரதியார் கண்ட திருவாசகம்' என்னும் விடயம்பற்றிப் பேசுகையில் தமிழில் உள்ள பொருள் இலக்கணத்தை இக்காலத்தில் தகுந்த முறையில் வெளிப்படுத்தியவர் பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார் என்றார்.

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை 'பார் புகழும் பாவலர் மகாலிங்கசிவம்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில், மாவிட்டபுரம் என்றதும் முதலில் மாவை முருகன் ஆலயமும், அடுத்ததாகக் குருகவி மகாலிங்கசிவம் அவர்களின் நினைவுமே எனக்கு வருமென்றார்.

பண்டிதர் இ. நமசிவாயம் 'கணேசையர் கண்ட தொல்காப்பியம்' என்னும் பொருள் பற்றியும், வழக்கறிஞர் இ. நம. சிவப்பிரகாசம் 'திருவாசகம் என்னும் தேன்' என்னும் விடயம் பற்றியும் பேசினர்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை பாராட்டுரை வழங்க, கம்பன் கலைக் கழகச் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் நன்றி கூறினர்.

ஈழத்து நாகசுர வித்துவான் என். கே. பத்மநாதன் குழுவினரின் நாகசுர இசையும், சந்தானலட்சுமி குழுவினரின் நடன நிகழ்ச்சியும் விழாவில் இடம்பெற்றன.

## பணத்தை பறித்தவருக்கு 4 மாதம் சிறை

பருத்தித்துறை, வியா.

அல்வாய வடக்கைச் சேர்ந்த பொன்னையா இராசன் என்பவர்மீது அல்வாய் தெற்கைச் சேர்ந்த நவரத்தினம் என்பவரிடம் இருந்து ரூபா 41ஐப் பறித்ததாக குற்றம் சாட்டிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு ஏ. வைத்திலிங்கம் எதிரிக்கு 4 மாதச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினர்.

இதற்கு முன்னரும் எதிரி இரு குற்றச்சாட்டுக்களில் முறையே 6 மாதமும் 2மாதமும் சிறைத்தண்டனை பெற்றவர்என்பதை அவர் ஏற்றுக்கொண்டார்.

## காரியதரிசி வேலை நீக்கம்

கொழும்பு, வியா.

சாகித்திய மண்டலக காரியதரிசி திரு. கே. வி. அமரதாசா கடந்த சனிக்கிழமையிலிருந்து அவரது பதவியிலிருந்தும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கெதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றங்களை விசாரணை செய்யாமல் திரு. அமரதாசா வேலையிலிருந்தும் விடுவிக்கப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விசாரணை நடத்த கோரிக்கை

களுத்துறை, வியா.

நல்கின் தீவில் உள்ள பொல்கொட ஏரியில் புதுவருடத்தன்று ஏற்பட்ட படகு விபத்தில் ஏழுபேர் மரணமடைந்தார்கள். இது பற்றி விசாரணை நடத்த உத்தரவிடுமாறு செல்வத்தை பட்டினசபைத் தலைவர் திரு. டெர்வின் எஸ். பெரேரா பிரதமரைக் கேட்டுள்ளார். விபத்து குறித்து புதிய விசாரணை ஒன்று நடத்துமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்வதென்று செல்வத்தை பட்டினசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மாவட்ட சபை மசோதா

கொழும்பு, வியா.

கச்சேரிகளுக்குப் பதிலாக மாவட்ட சபைகள் அமைப்பதற்கு வழிசெய்யும் மசோதா தயாரிக்கப்பட்டு விட்டதாகவும், இந்த மசோதா இன்னும் இரண்டு வாரகாலத்தில் பூரணமாக முடிவடைந்து விடுமெனவும் கூறப்படுகிறது.

ஸ்தல ஸ்தாபனசபைக் கமிஷனர் திரு மகாதந்தில தலைமையில் நியமிக்கப்பட்ட விசேட கமிட்டியினால் இந்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

## நிதிமந்திரி இணக்கம்

கொழும்பு, வியா.

பால் உணவுகளை இறக்குமதி செய்யும் முழுப்பொறுப்பையும் பாற்சபையிடம் கொடுக்க வேண்டுமென்ற உணவு மந்திரி திரு. பீலிக்ஸின் திட்டத்தை நிதிமந்திரி திரு இலங்கரத்ன ஏற்றுக்கொண்டுள்ளார். இத்திட்டத்தை முன்னர் திரு. இலங்கரத்ன எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பால் உணவுகளுக்கு ஒவ்வொரு ரூத்தலுக்கும் 15 சதம் லாபம் வைத்தால் இறக்குமதி வரி, விநியோகச் செலவுகள் ஆகியவையைக் கழித்து நல்ல லாபம் கிடைக்குமென திரு. பீலிக்ஸ் முன்னர் தெரிவித்தார். ஆனால் இதை அப்பொழுது திரு. இலங்கரத்ன ஆட்சேபித்தார்.

## ஊழல் விசாரணை கமிஷன்

ஸ்ரீநகர், ஜன. 16

கைத்தொழில்களுக்கு அளிக்கப்பட்ட கடன்களில் ஊழல் பற்றி விசாரணை செய்ய ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் என பிரதமமந்திரி திரு ஷம்சுதீன் அறிவித்தார்.

## கத்தோலிக்க இளைஞரின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

பொங்கல் தினத்தன்று பாஷையூர் கத்தோலிக்க இளைஞர்கள் ஆசார முறைப்படி பொங்கல் விழா நடத்தினர். காலையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஏராளமான கத்தோலிக்க மக்கள் கலந்துகொண்டனர்.

மாலையில் சில விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றபின்னர் திரு. க. விக்ரர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் திருவாளர்கள் எம. கே. அந்தனிசில், கே. டானியல் ஆகியோர் பேசினர்.

விளையாட்டுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

சிறுவர்க்கான தடையோட்டம்: அ. கியுபேட், சி. பிரான்சிஸ், என். றெபோட்.

குண்டெறிதல்: தே. பீற்றர், ஜி. ஜி. தேவதாஸ், செ ஞானதாஸ.

கயிறிழுத்தல்: திருமணமானவர்களை திருமணமாகாத இளைஞர்கள் தோற்கடித்தனர்.

விளையாட்டுப் போட்டிகளுக்கு திருவாளர்கள் ஏ. செபஸ்தியாம்பிள்ளை, எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, ஏ. அந்தோனிப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## மீண்டும் யு. என். பி. மேயர்

குருநாகல், வியாழன்

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. பி டி. வெலகதர மீண்டும குருநாகல் மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரது பெயரை திரு ஜோர்ஸ் ஜெயசிங்கா பிரேரிக்க, திரு. எஸ். ஜி. எஸ். பெரேரா அனுவதித்தார், திரு. எஸ். ஏ. எம், ரீயல் உதவி மேயராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

## பாராட்டு வைபவம

கொக்குவில், வியா.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆசிரியர்களாகக் கடமை புரிந்த பண்டிதர் சைவப்புலவர் மு. சின்னத்தம்பிக்கும், திருமதி சதாசிவத்துக்கும் அவர்களது சேவையைப் பாராட்டுமுகமாக ஓர் தேநீர் விருந்து கல்லூரி ஆசிரியர்களால் அளிக்கப்பட்டது. அவ்வமயம் இரு ஆசிரியர்களினதும் சேவையைப் பாராட்டி கல்லூரி அதிபர் திரு சி. கே. கந்தசாமியும், இளைப்பாறிய அதிபர் திரு. ஹண்டி பேரின்பநாயகமும் இன்னும் பலரும் பேசினர்.




ஒஸ்டர்மில்க் குழந்தைகள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் திகழ்கிறார்கள்

தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்புச் சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

ஒஸ்டர்மில்க்




கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

# விஞ்ஞானி கந்தையாவுக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு

பருத்தித்துறை, வியாழன்

பிரிட்டனைச் சேர்ந்த முதல் தரவிஞ்ஞான மேதைகளில் ஒருவரும் இலங்கையில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவருமான டாக்டர் திரு. கே. கந்தையா இலங்கையிலுள்ள சர்வதேச அணுநிலையத்தில் ஆராய்ச்சி செய்ய வந்திருப்பதை முன்னிட்டு அன்னருக்கு அவரது பிறந்த கிராமமான உடுப்பிட்டித் தொகுதியில் வரவேற்பொன்றளிக்க இப்பகுதிப் பிரமுகர்களும் கல்விமான்களும் முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

வடமராட்சி வாணிகலைக்கழகம் இந்த வரவேற்பை முன்னணியில் நின்று செயலாற்ற முன்வந்திருப்பதுடன் இப்பகுதி விஞ்ஞானப் பட்டதாரிகள் பலரைக் கொண்ட வரவேற்புக் குழுவொன்றையும் நியமனம் செய்திருப்பதாயும் இவ்விழாவை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் தலைமையில் நடாத்த முடிவு செய்திருப்பதாயும் கலைக்கழக நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

---

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்க சைவசமய அபிவிருத்திச் சபையின் ஆதரவில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்தில் இன்று காலை 8-45 முதல் 9-45 வரை ஆசிரியர் திரு. ச. நடராசா ''கண்ணப்பநாயனர்'' என்னும் பொருள்பற்றியும், நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் மாலை 6-45 மணி முதல் 8 மணி வரை சைவப் புலவர் திரு. வ. கந்தசுவாமி ''திருமுருகாற்றுப்படை'' என்னும் பொருள்பற்றியும், நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்தில் மாலை 7மணி முதல் 8மணி வரை ஆசிரியர் திரு. சு. தம்பாபிள்ளை ''சமய வாழ்வு'' என்னும் பொருள்பற்றியும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர்.

அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்கத்தாரால் வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தான காவலரின் ஆதரவில் வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை சமயப்பிரசங்கங்கள் நடாத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

முதலாவது பிரசங்கம் மேற்படிசங்கப்போஷகர்களுள் ஒருவரான திரு.எஸ்.யு சோமசேகரத்தின் தலைமையின்றுமாலை 6 மணிக்கு நடைபெறும். திரு. சி. தம்பிஐயா ''வரகுணபாண்டியனுக்குச் சிவலோகங் காண்பித்தமை'' என்னும் பொருள் பற்றி பிரசங்கமசெய்வார்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### வெள்ளி 17-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம், 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை.

இரவு 6-45 ஞானாஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, உருதுபாட்டல்கள், நாடகம்—வாழ்க்கையின் தத்துவம், 9-15 பேச்சு —'சுவாமி விவேகானந்தர்', 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்த இசை.






## ஆலய நிர்வாகிகள்

பருத்தித்துறை, வியாழன்

அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் திரு. ம. மூநகேசு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. சிவகுரு, உபதலைவர்: திரு. சி. வேலுப்பிள்ளை, இணைக்காரியதரிசிகள்: திரு. க. கிருஷ்ணபிள்ளை, திரு. வே. பாலசண்முகம், தனாதிகாரி திரு. க. பாலகிருஷ்ணபிள்ளை.

---

## கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு

கொழும்பு, வியா.

கீழ்க்கண்டவர்கள் இலங்கை கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு உத்தியோகத்ஸ்தர்களாக அண்மையில் நடந்த கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: கலாநிதி எஸ். வித்தியானந்தன். அங்கத்தவர்கள் திருவாளர்கள் கே. எஸ். நடராசா, வி. எஸ், கந்தையா, கே. செல்வரத்தினம், கலாநிதி ஆ. சதாசிவம், திருமதி என். மகாதேவா. செயலாளர்: திரு. கா. சிவத்தம்பி.

---

## பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள்

நல்லூர், வியாழன்

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள் இருக்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏழைப்பிள்ளைகளுக்கு பட்டின சபை இலவசமாக புத்தகங்கள் வழங்கவிருக்கின்றது. ஆயிரம் ரூபாய் பெறுமதியான புத்தகங்கள் இன்று பட்டினசபைத் தலைவரால் பாடசாலைப் பிள்ளைகளுக்கு விநியோகம் செய்யப்படவிருக்கின்றன.

---

## புதுவருட நிர்வாகிகள்

நீர்வேலி, வியா.

புத்தூர் சனசமூகநிலையத்தின் வருடாந்தக் கூட்டமொன்று சென்ற சனிக்கிழமை திரு. மூ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. நடராசா, தலைவர்: திரு. பெ மாணிக்கவாசகர், உபதலைவர்: திரு. நவரத்தினவேல், காரியதரிசி: திரு. சு. தில்லை அம்பலவாணர், உபகாரியதரிசி: திரு. மூ. சிற்றம்பலம், தனாதிகாரி: திரு. கா. கனகசிங்கம்.

7 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## பெருமையினருக்கு பாராட்டு

நல்லூர், வியாழன்

வலிகாமம் வடக்கு காரியாதிகாரியாகக் கடமையாற்றி உதவி அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளதிரு. ஆ. பெருமையினருக்கு வலி-வடக்கு மக்கள் நவாலியூர் திரு. சோ. நடராசன் தலைமையில் பாராட்டு விழா நடத்தினர்.

வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை, திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் திருவாளர்கள் சின்னத்தம்பி, ஆர். சதாசிவம், வேலுப்பிள்ளைத சண்முகசுந்தரம் உட்படப் பலர் பேசினர். திரு. மு. சின்னையா வரவேற்புரை நிகழ்த்தினர். இசைக்குரிசில் செல்லத்துரை பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்தார். திரு. சிவபாலசுந்தரம்பிள்ளை நன்றி கூறினர்.

## கொழும்பு இந்துக் கல்லூரி தமிழ்ப் பிரிவில் பெண்களுக்கு இடம்

கொழும்பு, வியா.

இவ்வாண்டிலிருந்து கொழும்பு இந்துக் கல்லூரியில் எச். எஸ். ஸி. அறிவியல் துறையில் தமிழ்ப் பிரிவில் பெண்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்று இந்துக் கல்லூரி அதிபர் திரு எஸ். அம்பலவாணர் எமது நிருபரிடம் கூறினர். தற்போது இக் கல்லூரியில் தமிழ்ப் பிரிவில் ஆயிரத்து முன்னூறு மாணவர்களும், சிங்களப் பிரிவில் நூறு மாணவர்களும் கல்வி பயில்கிறார்கள். கடந்த வருடத்தைக் காட்டிலும் இவ்வருடம் இக் கல்லூரியிலுள்ள மாணவர் தொகை முன்னூறு மாணவர்களால் அதிகாத்திருக்கிறது. தமிழ்ப் பிரிவில் சேர்ந்து அறிவியல் கற்பதற்கு அநேகம் மாணவிகள் மனுச் செய்திருந்தனர். மாணவிகளின் சிரேஷ்டதராதரத் தேர்விலுள்ள விசேட சித்தி, வயது ஆகியனவற்றையே அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். தமிழ்ப் பிரிவில் பெண்கள் சேர்ந்து கல்வி கற்பதற்கு வசதிகள் மேலும் அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## புதிய தலைவர் தெரிவு

மன்னர், வியா.

மன்னர் பட்டினசபையின் தலைவர் திரு. ஏ. ஈ. பெர்னாண்டோவின் கடும் சுகவீனம் காரணமாகத் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மன்னர்-வவுனியா உதவி உள்ளூராட்சி அதிபர் திரு. என், சிவராசா தலைமையில் பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்றது. புதிய தலைவராக ஜனாப் எம். எஸ். ஏ. றகீம் தெரிவு செய்யப்பட்டார்.

---

## தாச்சிப் போட்டி

சுளிபுரம், வியாழன்

தமிழரின் தேசிய விளையாட்டுகளில் ஒன்றாகிய தாச்சி விளையாட்டுப்போட்டி தைப்பொங்கல் தினத்தன்று மூளாய் இளைஞர் கோஷ்டிக்கும், சுளிபுரம் இளைஞர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது.

இரு சாராரும் மூன்று பழங்களைச் சமமாகப்பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்துக்கொண்டனர். போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. எஸ். விஷ்ணுசாமி கடமையாற்றினர்.

---

## சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்தார்

பருத்தித்துறை, வியாழன்

நெல்லியடியைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பொன்னையா என்பவர்மீது சட்டவிரோதமாகச் சாராயம் விற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் எதிரிக்கு ரூபா 200 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினர்.

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம் 17 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 87 - 1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி I இல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபையின் கூட்டத்தை, அந்த அட்டவணையின் பத்தி II இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி III இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அந்த அட்டவணையின் பத்தி IV இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வடபிரதேசம் (மேல்).

யாழ்ப்பாணம்,

அட்டவணை

| பத்தி I | பத்தி II | பத்தி III | பத்தி VI |
|---|---|---|---|
| சாவகச்சேரி கிராமச்சபை | 25-1-64 | 11-00 மு. ப. | சாவகச்சேரி கிராமச் சபை அலுவலகம். |

## கேள்விப்பத்திர அறிவித்தல்

கிளிநொச்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்திற்குக்கிட்டங்கியும் கந்தோரும் அடங்கிய ஒரு கட்டிடம் கட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் பலநோக்குகூட்டுறவுச்சங்கங்களிலிருந்தும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் 7-2-64 பகல் 12மணி வரை எனது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் எனது அலுவலகத்திலிருந்து பெற்ற படிவங்களில் அனுப்பப்படவேண்டும். கீட்டிட மாதிரிப்படமும் செலவின விபரமும் எனது அலுவலகத்தில் பரிசீலனைக்குப் பெற்றுக்கொள்ளலாம். யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி (பரந்தன் கிளை) யில் ரூபா 50/- கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சி காண்பிப்பவருக்கே கேள்விப்பத்திர படிவங்கள் வழங்கப்படும்.

மு. சின்னத்தம்பி,
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்,
தென் யாழ்ப்பாணம்.

கூட்டுறவு அலுவலகம்,
பரந்தன், 10-1-64. 1760


வரி விளம்பரம்

வெலிங்டன் சந்தி சூரியப் பிரகாஸ் ஸ்ரோஸை மறந்து விடாதீர்கள்!

எங்களிடம் எல்லவகை பெயின்ற்--வார்னிஸ் டிஸ்ரெம்பர், தின்னர், பில்லா, பிறைமர்-கார்ஸ்பிறே பெயின்ற் வகைகளும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். 1547


## பொங்கல் தின சமயவிழா

சுழிபுரம், வியா.

மூளாய் இந்துசமய அபிவிருத்திச்சங்கத்தினர் பொங்கல் தினத்தை முன்னிட்டு மூளாய் பிள்ளையார் கோவில் முன்றலில் சமயவிழாக் கொண்டாடினர். கூட்டுப்பிரார்த்தனையும் பூசையும் நடைபெற்றது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## முக்கிய அறிவித்தல்

எங்களுடைய ஸ்தாபனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக கடமையாற்றிய திரு. பி. எல்.சூரியபெருமா 1-1-64 விருந்து விலகிவிட்டார் என்பதை எங்களுடைய வியாபாரிகள் எல்லோருக்கும் இத்தால் அறிவிக்கின்றோம். திரு. எல். பி. சூரிய பெருமாவினல் 1-1-64 க்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த தொடர்புகளுக்கும் எலஸ்டோ பெந்தோட்ட ஸ்தாபனம் பொறுப்பாளிகளாக விருக்கமாட்டார்கள் என்பதையும் அறிவிக்கின்றோம். 1-1-64 க்கு முன்னர் தொடர்புகொண்ட எந்த விஷயங்களுக்குமுரிய பணத்தையும் எலெஸ்டோ பெந்தோட்ட ஸ்தாபனத்திற்கு விலாசமிட்டு அனுப்பப்படவேண்டும்.

வில்சன் குணசேகரா,
நிர்வாக அதிகாரி
எலெஸ்டோ பெந்தோட்ட

# தேர்தல் சட்டத் திருத்த மசோதா

## தெரிவுக்கமிட்டி சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது

கொழும்பு, புதன்

**தேர்தல் முடிவு ஒன்றை பாதிக்கக் கூடிய முறையில், எந்த ஒரு அபேட்சகரினதும் அல்லது எந்த ஒரு அரசியல் கட்சியினதும் பேச்சு, அல்லது நடவடிக்கை பற்றி பொய்யான தகவல்கள் எதையும் வெளியிடும் பத்திரிகையின் சொந்தக்காரர், ஆசிரியர் அல்லது பிரசுரகர்த்தா மீது சட்டவிரோதக் குற்றம் இழைத்ததாக குற்றம் சாட்டப்படும்.**

பார்லிமெண்ட் தேர்தல் சட்ட நடைமுறைத் தெரிவுக் கமிட்டியின் சிபார்சுகளில் இதுவும் ஒன்று தெரிவுக் கமிட்டியின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கைப் பார்லிமெண்டரித் தேர்தல் சட்டத் திருத்த மசோதா, இத்தெரிவுக் கமிட்டியின் சிபார்சுகளுடன் விரைவில் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படும். இம் மசோதாவின் ஆங்கிலப் பிரதி தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் சிங்கள, தமிழ் பிரதிகள் இன்னும் தயாராகவில்லையென்றும் தெரிய வருகிறது.

தெரிவுக் கமிட்டி செய்துள்ள சிபார்சுகளில் சில வருமாறு:-

வாக்களிப்பு நிலயத்திற்கும் நிலயத்திலிருந்து வீட்டிற்கும் வாக்காளர் இ. போ. சபை வாகனங்கள், புகையிரதம, மாநகரசபை போக்குவரத்துச் சேவை வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் செல்வதற்கு முற்ருகத் தடை விதிப்பது. இடபொழுது தனியார் கார்களிலோ டாக்ஸிகளிலே வாக்காளர் செல்லலாம் வாக்களிப்பு நிலயங்களுக்கு அருகில் அபேட்சகர்கள் கொட்டகைகள் நிறுவுவது முற்ருகத் தடை செய்யப்படும். வாக்களிப்பு நிலயங்களைச் சுற்றி கால்மைல் தூரத்திலுள்ள எல்லைக்குள் வாக்காளர்களிடம் ஆதரவு திரட்டுவது தடை செய்யப்படும். அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் தினத்திலிருந்து வாக்குகள் எண்ணப்படும் தினம் வரை கொடிகள் உபயோகிப்பது தடை செய்யப்படும். ஆனல் அபேட்சகரும் அவரது ஏஜன்டும் உபயோகிக்கும் கார்களில் கொடிகள் கட்டப் பட்டிருக்கலாம்.

அபேட்சகர் ஒருவரை ஆதரித்து கூட்டம் நடைபெறும் ஒரு இடத்தில் அந்தத் தினத்தில் தவிர, பொதுமக்கள் போய்வர அனுமதிக்கப்பட்ட எந்த இடங்களிலும் சுவரொட்டி விளம்பரங்கள், அட்டைகள், அறிவித்தல்கள் வெளியிடுவதற்குத் தடை விதிக்கபபடும்.

ஆள் மாருட்டத்துக்கு அபராதமில்லாமல் 12 மாதங்களுக்கு அதிகப்படாமல் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் அபேட்சகரின் கட்டுப்பணம் 500 ரூபாயிலிருந்து 250 ரூபாயாகக் குறைக்கப்படும்.

இத் தெரிவுக் கமிட்டியில் மந்திரிகள் டி. பி. இலங்கரத்ன, மகாநாம சமரவீரா, மைத்திரிபால சேனநாயகா உதவி மந்திரி டி. பி. தென்னககூன், உணவு மந்திரி பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா, திரு. ஆர். எஸ். வி போலியர், காலஞ்சென்ற ஏ. சந்தையா, திரு. பீட்டர் கெனமன், திரு. பிலிப் குணவர்த்தன, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. தகநாயகா, சேர். ராஸீக் பரீத், திரு. கே. எம். பி. ராஜரத்ன ஆகியோர் அங்கம் வகித்தனர்.

---

காங்கேசன்துறை பட்டின சபை

# காரியதரிசி விவகாரம்:

## ஸ்தலஸ்தாபன கமிஷன் அதிபரை தலைவர் சந்திப்பார்

நல்லூர், புதன்

காங்கேசன்துறை பட்டின சபைக்கு சிங்களக் காரியதரிசி நியமிக்கப்பட்டதனை தொடர்ந்து உருவாகியுள்ள நிலைமை பற்றி உள்ளூராட்சி ஆணையாளர் திரு டபிள்யு. வி. டி. மஹாதந்திலவுடன் பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் சனிக்கிழமை காலை பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவித்துள்ளாரகள்.

காங்கேசன்துறைப் பட்டின சபையின் செயலாளராகக் கடமையாற்றிய திரு. சி. கந்தசாமி பொறுப்புகளை ஒப்படைக்காமல் கொச்சிக்கடைக்குப் பதவியேற்கச் சென்றுவிட்டதினல் பட்டினசபையின் நிர்வாகம் பெரிதும் ஸ்தம்பித்து உள்ளது. செயலாளரின் அறை கடந்த 8 தினங்களாகப் பூட்டப்பட்ட நிலையிலேயுள்ளது. அந்த அறைக்குள தான்சபையின் முக்கிய தஸ்தாவேஜுகள் வைக்கப்பட்டுள்ளன. பட்டின சபையின் பிரதம குமாஸ்தாவே இப்போது சபையின் அலுவல்களைப் பார்த்து வருகிருர்.

திரு. கந்தசாமி பொறுப்புகளை ஒப்படைக்காமல் அங்கு வந்து விட்டதனல் சபையின் அலுவல்கள் பெரிதும் பாதிக்கடபட்டுள்ளதாக அறிவித்தும் இதுவரையும் உள்ளூராட்சி அதிகார சேவை நடவடிக்கை எடுக்காமலிருப்பது வருத்தத்திற்குரியது என்று திரு. மு. திடவீரசிங்கம் தெரிவித்தார்.

தமிழில் நிர்வாகம் நடத்தி வரும் சபையில் வலுக்கட்டாயமாக சிங்களம் திணிக்கப்படுவதனை எதிர்ப்பதோடு, தமிழில் நிர்வாகத்தை நடத்தக் கூடிய ஒரு செயலாளரை நியமிக்குமபடி வற்புறுத்தப் போவதாத திரு. திடவீரசிங்கம் தெரிவித்துள்ளார்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

சிங்லி (கொழும்பு) — ரீனாஸ்! (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (நாவலப்பிட்டியா) — ஸ்ரீகிருஷ்ண (திருமலை) — மொடேர்ன் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) — ஜெமினி (குருகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த
சரவண பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
தயாரிப்பு: ஜி. என். வேலுமணி — டைரக்ஷன்: கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்) — ஜெமினி கணேசன்— சரோஜாதேவி நடித்த கல்யாணப்பரிசு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தி...ள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வெங்காயம் எடுத்துச்செல்லத்தடை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் உத்தரவின்றி ஒருவர் ஏழு ருத்தல் வெங்காயத்துக்கு மேல் வெளி மாகாணங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாதென உணவு மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

---

# கடலில் இரு படகுகள் மோதி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று முன் தினமிரவு யாழ்ப்பாணம் கடலில் இரு இயந்திரப் படகுகள் மோதிக் கொண்டதால் ஒருவர் மரணமானர். மீன் பிடிப்பதற்குச் சென்ற இப் படகில் ஆறு பேர் இருந்தனரெனினும் மற்றும் ஐவரும் நீந்திப்போய் மற்றப் படகில் ஏறிக்கொண்டனர். இரு இயந்திரப் படகுகளும் மோதியதால் படகு கவிழ்ந்தகாலேயே யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த 23 வயதுடைய சூசை அலோசியஸ் என்பவர் நீரில் மூழ்கி மரணமானர்.

யாழ்ப்பாணம் கடலில் 15 மைல் தூரத்திற்கப்பால் நடந்ததாகக் கூறபபடும் இச் சம்பவம் பற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரததினம் விசாரணை நடத்தினர். இறந்தவரின் மைத்துனரான பேமஸ் யோசப் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

நானும், மரணமாகிய எனது மைத்துனரும் இன்னும் நால்வரும் இயந்திரப் படகில் கரையூரிலிருந்து இரவு 10 மணியளவில் புறப்படடோம். கரையிலிருந்து பதினைந்து மைல் சென்றிருப்போம், அதிகாலை 3 மணியளவில் எங்களுடைய படகுடன் ஏதோ தட்டுவதை உணர முடிந்தது. நாம் கல் என்று தான் நினைத்தோம். நானும் இறந்தவரும் ஒரு பக்கத்தில் இருந்தோம். படகு கவிழ்ந்தது. நானும் மற்றும் நால்வரும் நீந்திப்போய் மற்றப் படகில் ஏறிய போதுதான் எமது படகு ஒரு படகுடன் மோதியிருக்கிறது என்பதையும் கல்லில் அல்லவென்பதையும் உணர முடிந்தது. எனது மைத்துனரைக் காணமையால் கவிழ்ந்த படகுக்கு மற்றப் படகில் சென்றேம். அவர் கவிழ்ந்த படகில் அகப்பட்டு கிடந்தார். அவரை வெளியே எடுத்துக்கொண்டு காலை 7 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம்.

திரு. அலோசியஸ் காலிலும் மண்டையிலும் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஆஸ்பத்திரியில் மரணமானர். மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட்டு தீர்ப்பை ஒததி வைத்தார்.

---

# இந்தியாவை உருவாக்கிய முப்பெரும் தலைவர்கள்

## விவேகானந்தரும் காந்தியும் திலகரும் என்கிருர் ராஜாஜி

சென்னை, ஜன. 15

"சுவாமி விவேகானந்தர், லோகமான்யதிலகர், மகாத்மா காந்தி ஆகிய மூன்று மாபெரும் தலைவர்கள் தான் இந்தியாவின் விடுதலைக்குக் காரணமாக இருந்தவர்கள். இந்தியா அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது" என மைலாப்பூர் ராமகிருஷ்ண மடாலயத்தில விவேகானந்தர் நூற்ருண்டு விழாவையொட்டி நடைபெறும் சர்வமத மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசிய ராஜாஜி குறிப்பிட்டார்

"விவேகானந்தர் இந்திய மக்களின் தாழ்வு மனப்பான்மையை அகற்றினர் நாட்டின் பலம் அதன் மக்களிடமே இருப்பதாக திலகர் அறிவுறுத்தினர். மக்களின் சம்மதத்துடன் தான் அந்நியர் ஆட்சிசெய்து வருவதாயும், மக்கள் சம்மதத்தை வாபஸ்பெற்றுவிட்டால் அந்நியர் ஆட்சி அகன்றுவிடும் என்றும் காந்தி கூறினர். மக்கள் ஆதரவை பிரிட்டிஷ் காரர்கள் இழந்ததும் அவர்களுடைய ஆட்சியும் நாட்டிலிருந்து நீங்கிவிட்டது" என்றும் ராஜாஜி கூறினர்.

"மக்களின் தாழ்வு மனப்பான்மையை அகற்றி நாட்டின் சுதந்திரத்திற்கு விவேகானந்தர் அடி கோலினர். இந்திய வேதாந்தத்தை உலக மக்களுக்கு அவர் எடுத்துக் கூறினர். இந்தியர்கள் தலை நிமிர்ந்து நடக்கும்படி அவர் செய்தார். அந்தக்காலத்து இந்தியர்கள் தமது மதத்தைப் பற்றிப் பெருமை கொள்ளும்படி அவர் செய்தார்" என்றும் ராஜாஜி தொடர்ந்து கூறினர்.

பௌத்தமதம், சீக்கியமதம், இஸ்லாம், பார்ஸிகள் மதம் ஆகியவற்றைப்பற்றி மகாநாட்டில் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

ராஜாஜி தொடர்ந்து பேசுகையில், இறைவன் இல்லை ஆத்மா இல்லை என்று மறுப்பது தவறென்றும், அந்த உண்மையையே எல்லா மதங்களும் அறிவுறுத்துகின்றன என்றும் கூறினர்.

"சரியானதை ஏன் செய்ய வேண்டும் என்றும், தவறை ஏன் செய்யக்கூடாது என்றும் மக்கள் கேட்கின்றனர். ஆகவே தான் நாம் இறைவனை அலட்சியம் செய்யமுடியாது. கடவுளே வந்து சரியானதைச் செய்யுமாறு உபதேசித்தாலும் அவருடைய அத்தாட்சியைக் கேட்கும் நிலையில் மக்கள் இருக்கிருர்கள். தார்மீகத்தின் அடிப்படையை நாம் அலட்சியம் செய்கிறேம்.

நமக்கு அரசாங்கம் தேவை, பிரதமர் தேவை, அதிகாரிகள் தேவை. ஆகவே கடவுளும் தேவை" என்றும் ராஜாஜி கூறினர்.

---

# வவனியா நகரசபை தலைவர்

## திரு. பொன்னையா தெரிவு

வவனியா, புதன்

வவனியா நகரசபை தலைவர், உபதலைவர் தேர்தல் இன்று காலை 10 மணிக்கு உதவி தல தாபன தலைவர் திரு. என். சிவராசா தலைமையில் நடைபெற்றது.

9-ம் வட்டார அங்கத்தவரும் இளைப்பாறியவிதானையாருமான திரு. மயில்வாகனம் பொன்னையா முன்னுள் தலைவரும் முதலாம் வட்டார மெம்பருமான சபாபதி சுப்பிரமணியம் இருவரும் போட்டியிட்டார்கள். திரு. பொன்னையா அதிகப்படியான 3 வாக்குகளினல் வெற்றி பெற்ருர்.

திரு. பொன்னையாவின் பெயரை மா. இராமசாமி பிரேரிக்க சி. தருமலிங்கம் ஆமோதித்தார். திரு. சபாபதி சுப்பிரமணியத்தின் பெயரை த. சுப்பிரமணியம் பிரேரிக்க எஸ். எம். யூசுப் ஆமோதித்தார்.

தலைவர் தேர்தலுக்கு இரு பேர் போட்டியிட்டதால் வாக்கெடுப்பு நடைபெற்றது. வாக்கெடுப்பை பகிரங்கமாக நடத்த திரு. பொன்னையாகேட்டுக் கொண்டார். திரு. சுப்பிரமணியம்அவருக்கு ஆதரவாக நின்ருர்.

தேர்தல் முடிவுக்குப் பின் தலைவர் திரு. பொன்னையா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

உப-தலைவராக திரு. மா. இராமசாமி தெரிவு செய்யப்பட்டார்.